**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் வியாழக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.306/2017** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வேணுகோபால் | **வயது** | : | 75 |
| **த.பெ** | : | முருக கவுண்டர் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | காலசமுத்திரம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>09.10.2025 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் இந்த வழக்கில் முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தான் நான் 2 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஏன் மேற்படி 2 ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் தொலைந்துவிட்டது, பின்பு நீதிமன்றம் மூலம் சான்றிட்ட நகலை கோரி அது வந்த பிறகு தாக்கல் செய்தேன். பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 12.02.1993 அன்று எழுதப்பட்டது. எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் அதே தேதியில் தான் பதிவு செய்யப்பட்டது.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் ஓய்வுபெற்ற VAO சிவன் எழுதினார், வாழையூர் ரெட்டிதோப்பை சேர்ந்த ஜெயராமன் மற்றும் ராமசாமி ஆகியோர்கள் இருந்தார்கள். மேற்படி VAO சிவன் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போதே ஓய்வு பெற்றுவிட்டாரா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, என்ன நேரம் இருக்கும் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. யார் யார் எல்லாம் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் ஜெயராமன் மற்றும் ராமசாமி சாட்சி கையொப்பம் போட்டார்கள். மேற்படி இருவரையும் நான் தான் அழைத்துச்சென்றேனா என்றால் எனக்கு பி.வா.சா,ஆ.1 ஆவணம் எழுதப்பட்டதே தெரியாது. தற்போது எனக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி தெரியும் என்றால் வாதி வழக்கை தாக்கல் செய்தபிறகு என் தந்தை எனக்கு தெரிவித்தார்.

3. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் காலசமுத்திரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான், ஆவணத்தை எழுதிய VAO சிவன் மட்டும் தான் காலசமுத்திரம் கிராமத்தை சேர்ந்தவர். சாட்சிகள் ஜெயராமன் மற்றும் ராமசாமி இருவரும் ஓய்வுபெற்ற இராணுவவீரர்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சொத்து விவரம் எந்த ஆவணத்தை பார்த்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அப்போது நான் சர்வீசில் இருந்தேன். (சாட்சி மீண்டும் நான் சர்வீஸ் முடித்து

வந்துவிட்டேன் என்று கூறுகிறார்). நான் ஓய்வுபெற்று சர்வீசில் இருந்து 30.11.1991 ல் வந்துவிட்டேன்.

4. பி.வா.சா.ஆ,.1 ஆவணம் எழுதப்பட்டபோது என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் இல்லை அவர் நலமாக தான் இருந்தார். பி.வா.சாஆ.1 ஆவணத்தில் அடிக்கடி என் தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.1 ஆவணத்தில் அடிக்கடி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் என்று உள்ளது என்றால் உள்ளது. என் தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் நல்ல மனநிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை 1980 ல் இருந்து என்னுடன் தான் இருந்தார். 1980 ல் நான் இராணுவத்தில் இருந்ததால் என் தந்தை என்னுடன் இருந்திருக்கமாட்டார், நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் இராணுவத்தில் இருந்ததால் என் தந்தை யாரிடம் இருந்தார் என்பது பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல, என்னுடைய குடும்பத்தினர் உடன் தான் என் தந்தை இருந்தார்.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டபோது என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்தார், அதைப்பயன்படுத்தி எனக்கு சாதகமாக உயிலை எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டபோது என் தாயார் தஞ்சையம்மாள் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து சர்வே எண்.122/1 பி - 3 ஏக்கரில் மேல்பாதி 1 ½ ஏக்கரை 21.10.1980 ல் என் தந்தை சுந்தரேசன் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. தற்போது சர்வே எண்.122/1 பிக்கான பட்டா எண்.415 ல் என் தந்தை மற்றும் சுந்தரேசன் ஆகியோரின் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி சர்வே எண்.122/1 பி- ல் பொதுவில் 3 ஏக்கரில் 3 ல் 1 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.92/7 ல் வாதி சேகர் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் தந்தை தான் மேற்படி சர்வே எண்ணை அனுபவித்து வந்தார், வாதி எங்களுக்கு தெரியாமல் ் அவர் பெயருக்கு பட்டா மாற்றிக்கொண்டார். என் தந்தை அனுபவித்து வந்தார் என்று நான் சொல்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன், நான் மேற்படி எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.92/7 சேர்த்து எழுதப்பட்டதால், உயில் ஆவணம் எழுதப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல, மேற்படி இடத்தில் தான் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருக்கும்போது குடியிருந்தோம். மேற்படி நாங்கள் குடியிருந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.92/7 ல் வாதிக்கு சொந்தமான மெத்தை வீடு மற்றும் இடம் வாதிக்கு உரிமையானது, எனக்கும் என் தந்தைக்கும் உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, 1999 வரை வாதி சர்வீசில் இருந்தார், அதுவரை என் தந்தை அதில் தான் குடியிருந்து வந்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டதால் தான் சுந்தரேசன் மற்றும் வாதிக்கு சொந்தமான இடத்தையும் சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் அசல் உயிலை தாக்கல்

செய்யவில்லை என்றால், அசல் உயில் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ்உயில் எப்போது தொலைந்தது என்றால் என் தந்தை இறந்தபிறகு தான் நான் பார்த்தேன், 1997 ல் பார்க்கும்போது உயிலை காணவில்லை, மேலும் உயில் சொத்து மற்றும் இதர என் தந்தை சொத்து பத்திரங்கள் என் தந்தை என்னிடம் தான் கொடுத்துவைத்தார், 1997 ல் அதுவும் காணாமல் போய்விட்டது. மேற்படி பத்திரங்கள் காணாமல் போனது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் புகார் அளிக்கவில்லை, நகலை வைத்து வாதாடிக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். மேற்படி உயில் ஆவணம் உண்மையான ஆவணமாக இருந்து இருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்து தேடி இருப்பேன், பொய்யான ஆவணம் என்பதால் தான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணம் எழுதும் காலத்தில் அசல் வழக்கு எண்.26/1990 மற்றும் 489/1992 ஆகிய வழக்குகள் நான் தாக்கல் செய்த வழக்குகள் என்றும், அசல் வழக்கு எண்.599/1988 (அ.வ.எண்.306/2017) வாதி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்தது என்று சொன்னால் சரிதான். உயில் ஆவணத்தின் படி அதிலுள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்ப்பதற்காக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கவில்லை. பி.வாசா.ஆ.1 பொய்யான உயில் என்பதால் தான் மேற்படி சொத்துக்களை சேர்ப்பதற்காக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் மேலும் ஏற்கக்கூடிய ஆவணங்கள் இல்லை என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.10 10:29:22 +0530

District Munsif,
Polur.